**அக்டோபர் – 27**

# தேசியச் செய்திகள்

## காவல்துறை அமைப்பு 2018 பற்றிய தரவு

- மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியகத்தின் முதன்மை வெளியீடான காவல்துறை அமைப்புகளின் தரவு (Data on Police Organizations-DoPO) 2018 என்ற தரவினை வெளியிட்டார்.
- இந்த வெளியீடானது அனைத்து மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள், மத்திய ஆயுதப் படை அமைப்பு மற்றும் மத்திய காவல்துறை அமைப்புகளிடமிருந்துப் பெறப்படும் காவல்துறை உள்கட்டமைப்பு, மனிதவளம் மற்றும் பிற வளங்கள் பற்றிய தகவல்களின் தொகுப்பாகும்.

### *முக்கியத் தரவு*

- மகளிர் காவல்துறையின் பலத்தில் 20.95% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- இந்திய காவல்துறையில் பெண்களின் மொத்த சதவீதம் இப்போது 8.73% ஆகியுள்ளது.
- மாநில அளவில் ஒட்டு மொத்தக் காவலர்களின் விகிதம் ஆனது ஒரு லட்சம் மக்களுக்கு 95 போலீஸ்காரர்கள் என்பதாகும்.
- காவல் நிலையங்கள் 15579 என்ற அளவிலிருந்து 16422 ஆக உயர்ந்துள்ளன.
- இதில் இணைய வழி குற்றங்களைக் கண்டறியும் காவல் நிலையங்களும் அடங்கும். அவற்றின் எண்ணிக்கை 84 என்பதிலிருந்து 120 ஆக உயர்ந்துள்ளது.
- மின்னணுக் கண்காணிப்பு அமைப்பு மேம்படுத்தப் பட்டுள்ளது - மொத்தம் 2,75,468 மறைகாணி (சிசிடிவி) ஒளிப்படக் கருவிகள் நிறுவப் பட்டுள்ளன.

## பிஎஸ்என்எல்-எம்டிஎன்எல் இணைப்பு

- பி.எஸ்.என்.எல் மற்றும் எம்.டி.என்.எல் ஆகியவற்றின் புத்துயிர் திட்டத்திற்கும், இரண்டையும் கொள்கை அல்லது திட்ட அளவில் இணைப்பதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பி.எஸ்.என்.எல் மற்றும் எம்.டி.என்.எல் ஆகியவை நீண்டகாலப் பத்திரங்களை ரூ.15,000 கோடி என்ற அளவிற்குத் திரட்டும்.
- பத்திரங்களுக்கான இறையாண்மை உத்தரவாதம் இந்திய அரசால் வழங்கப்படும்.

## VT-NMD (நரேந்திர மோடி தேவேந்திர) விமானம்

- VT-NMDயின் (நரேந்திர மோடி தேவேந்திர) விமானச் சோதனைகள் இறுதியாக 2019 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படும்.
- சிவில் விமானப் போக்குவரத்து பொது இயக்குனரகத்தின் கீழ் செயல்படும் சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்குமுறை ஆணையத்திடம் ஒரு பயண அனுமதியைப் பெற்ற பின், அந்த விமானம் பயணத்திற்குரியது என்று சான்றளிக்கப்படும்.
- இது இந்தியாவின் முதல் சோதனை விமானமாகும்.
- 6 இருக்கைகள் கொண்ட இந்த விமானத்தை முன்னாள் விமானி அமோல் யாதவ் கட்டமைத்துள்ளார்.
- அவர் முதன்முதலில் 2016 ஆம் ஆண்டில் இந்தியாவில் தயாரிப்போம் என்ற

கண்காட்சியில் அந்த விமானத்தைக் காட்சிப் படுத்தினார்.




## NAM உச்சி மாநாட்டில் துணைக் குடியரசுத் தலைவர்

- அக்டோபர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் அஜர்பைஜானின் பாகுவில் நடைபெற்ற 18வது அணிசேரா இயக்கத்தின் (Non-Aligned Movement - NAM) உச்சி மாநாட்டில் துணை ஜனாதிபதி வெங்கய்ய நாயுடு கலந்து கொண்டு இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- தொடர்ந்து இரண்டாவது முறையாக பிரதமர் மோடி இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளத் தவறிவிட்டார்.
- முன்னதாக வெனிசுலாவில் நடைபெற்ற 2016 ஆம் ஆண்டு சந்திப்பையும் அவர் தவற விட்டார்.
- 1961 ஆம் ஆண்டு முதல், இந்தியப் பிரதமர் எப்போதும் NAM உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்.
- விதிவிலக்கு: 1979 ஆம் ஆண்டில், சௌத்ரி சரண் சிங் தற்காலிகப் பிரதமராக இருந்த போது இந்த மாநாட்டில் கலந்து கொள்ள தவற விட்டார்.
- மோடியின் வராமையானது 60 வயதான இந்த அமைப்பில் கடந்த கால நடைமுறையிலிருந்து ஒரு தீர்க்கமான விலகலைக் குறிக்கிறது.
- XVIIIவது NAM உச்சி மாநாட்டின் கருப்பொருள் "சமகால உலகின் சவால்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த மற்றும் போதுமான பதிலை உறுதி செய்வதற்காக பாண்டுங் கோட்பாடுகளை நிலை நிறுத்துதல்" என்பதாகும்.

### *பாண்டுங் கோட்பாடுகள்*

- பாண்டுங்கின் பத்து கோட்பாடுகள் உலக அமைதி மற்றும் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தை உள்ளடக்கிய ஒரு அரசியல் அறிக்கையாகும்.
- அவை 1955 ஆம் ஆண்டில் நடந்த ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் வகுக்கப் பட்டன.

### *NAM பற்றி*

- அணிசேரா இயக்கத்தின் (NAM) நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒரு நாடாகும்.
- NAM அமைப்பானது 1961 ஆம் ஆண்டில் 29 உறுப்பினர்களுடன் நிறுவப் பட்டது.
- தற்போது இது 120 உறுப்பினர்களாக வளர்ந்து தேசிய-நாடுகளின் மிகப்பெரிய குழுக்களில் ஒன்றாக விளங்குகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## கொடிய போலியோ வைரஸ் 3 (WPV3) ஒழிக்கப்பட்டது

- உலக போலியோ தினத்தில் (அக்டோபர் 24) உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், கொடிய போலியோ வைரஸ் வகை 3 (Wild Polio Virus - WPV3) உலகளவில் ஒழிக்கப் பட்டுள்ளதாக நிபுணர்களின் சுயாதீன ஆணையம் ஒன்று அறிவித்தது.
- பெரியம்மை மற்றும் கொடிய போலியோ வைரஸ் வகை 2 ஆகியவற்றை ஒழித்ததைத் தொடர்ந்து இது நிகழ்ந்துள்ளது.
- இதன் மூலம், 3 கொடிய போலியோ வைரஸ் விகாரங்களில் 2 வகைகள் அழிக்கப் பட்டுள்ளன.
- கொடிய போலியோ வைரஸ் வகை 1 என்ற வகையை அகற்ற முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
- இந்த வைரஸ் ஆனது இன்னமும் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளில் புழக்கத்தில் இருந்து வருகின்றது.
- தனிப்பட்ட மற்றும் நோயெதிர்ப்பு ரீதியாக மூன்று வேறுபட்ட கொடிய போலியோ வைரஸ் விகாரங்கள் தற்போது உள்ளன
    - கொடிய போலியோ வைரஸ் வகை 1 (WPV1)
    - கொடிய போலியோ வைரஸ் வகை 2 (WPV2)
    - கொடிய போலியோ வைரஸ் வகை 3 (WPV3)

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பனிச் சிறுத்தை கணக்கெடுப்பு

- பனிச் சிறுத்தைகளின் எண்ணிக்கை மற்றும் புவியியல் வரம்பை மதிப்பிடுவதற்கு இந்தியா தனது முதல் பனிச் சிறுத்தைக் கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.
- புலி, சிறுத்தை, சிங்கம் ஆகியவையும் சேர்ந்த ‘பாந்தெரா’ பேரினத்தின் உறுப்பினர் இந்தப் பனிச் சிறுத்தை ஆகும்.
- இதன் அறிவியல் பெயர் “பாந்தெரா அன்சியா” என்பதாகும்.
- 2017 ஆம் ஆண்டில், IUCN இன் சிவப்புப் பட்டியலில் பனிச் சிறுத்தையின் நிலை ‘ஆபத்தான’ என்ற இடத்திலிருந்து ‘பாதிக்கப்படக் கூடியது’ என்ற இடத்திற்கு மாற்றப் பட்டது.
- பனிச் சிறுத்தைகளின் உலகளாவிய தொகையில் 10% இந்தியாவில் உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## ராணி சென்னம்மா - கர்நாடகா

- கர்நாடக முதல்வர் பி.எஸ். எடியூரப்பா கிட்டூரில் நடைபெறும் கிட்டூர் உத்சவத்தைத் துவக்கி வைத்தார்.
- மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த விழாக்களில் விளையாட்டு, கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் ராணி சென்னம்மாவின் இராஜ்ஜியம் பற்றிய சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

- அவர் (1778 - 1829) ஒரு இந்திய சுதந்திரப் போராளி மற்றும் பெண் சுதந்திரப் போராட்ட வீரர்களில் முதலாவது நபர்களில் ஒருவராக இருந்தவர் ஆவார். மேலும் அவர் கர்நாடகாவின் முன்னாள் சுதேச அரசான கிட்டூரின் ராணியாகவும் இருந்தார்.
- 1824 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராக அவர்களின் வாரிசு இழப்புக் கொள்கையைப் புறக்கணித்து ஒரு ஆயுதப் படையை அவர் வழி நடத்தினார்.

## ஒடிசாவின் ஒருங்கிணைந்த நீர்ப்பாசனத் திட்டம்

- காலநிலை நெகில்திறன் கொண்ட விவசாயத்திற்காக ஒடிசா ஒருங்கிணைந்த நீர்ப்பாசனத் திட்டத்திற்காக இந்திய அரசு, ஒடிசா அரசு மற்றும் உலக வங்கி ஆகிய அமைப்புகள் இணைந்து 165 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடைய கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- கடன் வழங்கும் அமைப்பு: புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான சர்வதேச வங்கி.
- இந்திய அரசின் காலநிலை மாற்றம் குறித்த தேசிய செயல் திட்டம் என்ற திட்டத்தின் கீழ்.
- இது ஒடிசாவின் 15 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1,25,000 சிறுநில விவசாயிகளுக்குப் பயனளிக்கும்.
- 2009 முதல், ஒடிசாவில் வறட்சியின் அதிர்வெண் 5 ஆண்டுகளில் 1 என்ற அளவில் இருந்து 2 ஆண்டுகளில் 1 என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக போலியோ தினம் - அக்டோபர் 24

- போலியோ நோய் மற்றும் அதன் ஒழிப்பு முயற்சிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் அக்டோபர் 24 அன்று உலக போலியோ தினம் கொண்டாடப் படுகின்றது.
- உலக போலியோ தினம் 2019 இன் கருப்பொருள் "முன்னேற்றக் கதைகள்: உலக போலியோ தினத்திற்கான கடந்த காலமும் நிகழ்காலமும்".
- பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் போலியோ இன்னும் பரவலாக உள்ளது.
- இந்தியாவில் கடைசியாக பதிவு செய்யப்பட்ட போலியோவின் நிலை 2011 ஜனவரி ஆகும்.
- இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் கடைசியாக கண்டறியப்பட்ட கொடிய போலியோ வைரஸ் தொற்று ஏற்பட்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 2014 ஆம் ஆண்டில் SEAR (South East Asian Region - தென்கிழக்கு ஆசியப் பிராந்தியம்) நாடுகள் போலியோ இல்லாத நாடுகள் என அறிவிக்கப் பட்டுள்ளன.
- நைஜீரியா 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் போலியோ தாக்கம் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டது.
- சர்வதேச போலியோ ஒழிப்பு முயற்சியானது பின்வரும் 5 அமைப்புகளான "உலக சுகாதார அமைப்பு, ரோட்டரி இன்டர்நேஷனல், அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள், ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதி (யுனிசெஃப்) மற்றும் பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றுடன் நாடுகளின் தேசிய அரசுகளும் ஒரு பொது-தனியார் பங்குதார முறையில் இணைந்து மேற்கொண்ட ஒரு முயற்சியாகும்.

- போலியோ என்பது ஒரு அதிகம் தொற்றக் கூடிய நோய் ஆகும்.
- இது பொதுவாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதிக்கும் கொடிய 'போலியோ வைரஸ்' காரணமாக ஏற்படும் நோய் ஆகும்.
- கொடிய போலியோ வைரஸ் (Wild Polio Virus - WPV) எனப்படும் போலியோ வைரஸில் மூன்று விகாரங்கள் உள்ளன.
- கொடிய போலியோ வைரஸ் 3 என்ற வகையால் கடைசியாக ஏற்பட்ட பாதிப்பு 2012 ஆம் ஆண்டில் வடக்கு நைஜீரியாவில் காணப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில் கொடிய போலியோ வைரஸ் வகை 2 நீக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது - இது நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இரண்டாவது கொடிய போலியோ வைரஸ் வகை ஆகும்.
- மூன்று கொடிய போலியோ வைரஸ்களில் இரண்டு நீக்கப்பட்ட நிலையில், கொடிய போலியோ வைரஸ் வகை 1 மட்டுமே இன்னும் புழக்கத்தில் உள்ளது. இது ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளில் மட்டுமே இன்னும் காணப் படுகின்றது.

## ஒளிக் கட்புல பாரம்பரிய தினத்திற்கான உலக தினம் - அக்டோபர் 27

- யுனெஸ்கோவின் பொது மாநாடு 2005 ஆம் ஆண்டில் ஒளிக் கட்புல பாரம்பரியத்திற்கான உலக தினத்தை நினைவு கூருவதற்கு ஒப்புதல் அளித்தது.
- பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளிக் கட்புல ஆவணங்களின் (திரைப்படங்கள், ஒலி மற்றும் காணொளிப் பதிவுகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்) முக்கியத்துவம் மற்றும் அதனைப் பாதுகாத்தலில் உள்ள சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் "ஒலி மற்றும் படங்கள் மூலம் கடந்த காலத்தைத் தொடர்புபடுத்துங்கள்" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★